முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 583**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**04.05.2021**, செவ்வாய்கிழமை

1. யோக சக்தியே அரங்கா போற்றி
உயர் தர்மம் வழங்கும் தேசிகா போற்றி
வகைபட ஆறுமுகன் யானும் இனிதே
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை அரங்கமகானுக்கு உரைப்பேன்
அகிலமதில் அரங்கன் தர்மம்
பேசிடுவேன் உலகளாவிய வண்ணம்
பெருமளவில் பரவி இனிதே உலகை மாற்றும்
3. மாற்றம் தரும் அரங்கன் தயவின் கொள்கை மக்களை காத்து ஞான வழி நடத்தும்
ஆற்றல்பட அரங்கன் சுத்த சைவ நெறியை அகிலத்தார் ஏற்று வருதல் காண
மாற்றம் தரும் இந்த பேரிடர் காலம்
மக்களுக்கு மரணமில்லாத பாதுகாப்பு சூட்சுமமாக
4. ஆகவே அரங்கனுள் என் அற்புதம்
ஆற்றலாக நிரம்பி வரமாக மக்களுக்கு வர
மிகைபட அரங்கன் தொடர்பு கூட்டி
மண்ணுலகோர் அரங்கன் வழி வரவர
5. வருகவே வையகத்தில் பேரிடர் ஒழியும்
வதைக்கின்ற இந்த துன்பங்கள் அகன்றோடும்
ஐயமற முருகப்பெருமான் என்னருளோடு
அனைவருக்கும் உயிர் பாதுகாப்பு உண்டாகும்
6. ஆகவே அரங்கனை தொடர்ந்து வாரீர்
அகிலத்தாரே ஞானபலம் பெற்று சிறப்பீர்
சிறப்பான தர்மபலத்தை தொடருவதாலே சித்திகளும் கூடி உலகோர் உயர்ஞானி ஆகி
மறுப்பின்றி அரங்கன் வழி மண்ணுலகை மாற்றி ஞானயுகம் படைப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.